இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) ADB.org இல் உள்ள 10 ஏப்பிரல் 2017 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

# இலங்கை: சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய நிறுவனங்கள் கடன் உத்தரவாத நிறுவனம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலங்கை: சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய நிறுவனங்கள் கடன் உத்தரவாத நிறுவனம் |
| திட்டத்தின் இலக்கம் | 50349-002 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | முன்மொழியப்பட்டுள்ளது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன்<br>தொழில்நுட்ப உதவி |
| நிதியிடல் மூலம்/ தொகை | கடன்: சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய நிறுவனங்கள் கடன் உத்தரவாத நிறுவனம்<br>சாதாரண மூலதன வளங்கள் — US$ 100.00 மில்லியன்<br>**தொழில்நுட்ப உதவி: சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய நிறுவனங்கள் கடன் உத்தரவாத நிறுவனம்**<br>நிதித் துறை அபிவிருத்தி கூட்டுப்பங்காண்மை சிறப்பு நிதியம் — US$ 500,000.00<br>தீர்மானிக்கப்பட வேண்டியது — US$ 500,000.00 |
| மூலோபாய செயற்பட்டியல் | உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | அறிவுசார் தீர்வுகள்<br>பங்காண்மைகள்<br>தனியார்துறை அபிவிருத்தி |
| துறை / உபதுறை | **நிதி** - சிறிய மற்றும் நடுத்தர நிறுவன நிதி மற்றும் குத்தகை |
| பால் சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | சில பால் மூலகங்கள் |

**விவரணம்**

முன்மொழியப்பட்ட $100 மில்லியன் கடன், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிற்கு வர்த்தகக் கடன்களிற்கான அணுகலுக்கு உதவும் ஒரு புதிய வங்கியல்லாத நிதி நிறுவனமான, சிறிய மற்றும் நடுத்தர நிறுவன கடன் உத்தரவாத நிறுவனம் உருவாக்கப்படுவதற்கு உதவும்.

**திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபாயத்திற்கான தொடர்பும்**

அபிவிருத்திச் சவால். சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருக்கின்றது. அவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% சத வீதத்திற்குப் பொறுப்பாளர்களாக உள்ளனர். சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வறுமைக் குறைப்பிற்கு, அவை 45% சதவிகித வேலைவாய்ப்பினை வழங்குவதனால் இன்னும் முக்கியமாக உள்ளது. அவற்றின் முக்கியத்துவம் இருந்தபோதிலும், பாதுகாக்கப்பட்ட கடன் சட்டம், கடன் தகவல் மையம், மற்றும் ஒரு சொத்துப் பதிவகம் போன்ற முக்கிய சந்தை உட்டமைப்பின் நிலவுகை இருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் நிதியுதவிக்குப் போராடுகின்றன. 2011 ஆண்டின் ஒரு உலக வங்கி ஆய்வில், உள்ளடக்கப்பட்ட 29 வளர்ந்து வரும் உறுப்பு நாடுகளிடையே நான்காவது உயர்ந்த நிறுவனங்களான, 30% இலங்கை நிறுவனங்கள் நிதியுதவிக்கான அணுகலை ஒரு பிரதான கட்டுப்பாடாக மேற்கோள் காட்டுகின்றன. இலங்கை வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கத் தயங்குவதற்கான ஒரு முக்கிய விளக்கம் என்னவென்றால் அவை பிணைய அடிப்படையிலான கடன்களை நம்பியிருப்பதாகும்.

அத்தகைய சந்தைத் தோல்விகளை சமாளிப்பதற்கு, பல ஆண்டுகளாக அரசாங்கம் பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர நிறுவன கடன் உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. எவ்வாறாயினும், எதுவும் செழித்திருக்கவில்லை. சந்தைப் பங்கேற்பாளர்கள் மெதுவான கோரிக்கை முறைவழிப்படுத்தல், வரையறுக்கப்பட்ட உத்தரவாதப் பாதுகாப்பு, மற்றும் உயர் கட்டுப்பணம் என்பனவற்றை மேற்கோள் காட்டுகின்றனர் (இணைப்பு 3).

முக்கிய பங்குதாரர்களுடனான கொள்கை உரையாடல்கள். ஒரு விரிவான தீர்வுக்கான தேவையை அங்கீகரித்து, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கடன் உத்தரவாதங்களை அபிவிருத்தி செய்வதற்கு 2016 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட உரையில் அரசாங்கம் முன்மொழிந்ததுடன் ADB இன் உதவியைக் கோரியது. ADB சந்தைத் தேவையை மதிப்பீடு செய்வதற்கு, சர்வதேச சிறந்த நடைமுறைகளை ஆராய்ந்து, ஒரு வணிகத் திட்டத்தைத் தயார் செய்வதற்கான ஒரு திறன் மேம்பாட்டுத் தொழில்நுட்ப உதவியை உருவாக்கியது. ADB இன் 2016 ஆண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய நிறுவனங்களின் கடன் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வழிப்படுத்தும் குழு இந்தப் பணியை மீளாய்வு செய்து வரைவு இறுதி அறிக்கையை செப்தெம்பர் 2016 இல் இலங்கை அமைச்சரவைக்கு வழிமொழிந்தது. பிரதம மந்திரியினால் தலைமைதாங்கப்பட்ட பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு, ADB இன் முன்மொழிவை அக்டோபர் 2016 இல் வழிமொழிந்ததுடன், நிதி அமைச்சர் 2017 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட உரையில் நிறுவனத்தை நிறுவுவதற்கான திட்டத்தை முன்வைத்தார்.

ADB இன் அணுகுமுறை. முன்மொழியப்பட்ட அணுகுமுறை முந்தைய உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர நிறுவன கடன் உத்தரவாதத் திட்டங்கள் (இணைப்பு 3) மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் (பந்தி 4) ஆகியவற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து பாரியளவில் வரையப்படுகின்றது. புதிய நிறுவனம் நன்கு நிதியளிக்கப்பட்ட, வினைத்திறனாக நிர்வகிக்கப்படுகின்ற நிதியியல் ரீதியாக நிலைத்திருக்கின்ற, அரசியல் செல்வாக்கிலிருந்து அகற்றப்பட்ட, பெருநிறுவன ஆளுகையின் உயர் மட்டத்துடன் இயக்கப்படுகின்ற மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். நிறுவனத்தின் தொடக்கக் கருவிகள் இலாபகரமானதாகவும் வலுவான கடன்

| | |
|---|---|
| | மதிப்பீட்டினை உறுதிப்படுத்துமாறு பழமை வாய்ந்ததாக இருக்க வேண்டும். முன்மொழியப்பட்ட அணுகுமுறை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பொது கடன் உத்தரவாத் திட்டங்களிற்கு உலக வங்கியின் கோட்பாடுகளுடன் கூட இணைந்திருக்கின்றது (இணைப்பு 4).<br><br>நிதி அணுகலுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு. முன்மொழியப்பட்ட கடன் ADB இன் நாட்டுக் கூட்டாண்மை மூலோபாயத்தின் மூன்று தூண்களில் ஒன்றுடன் இணங்கித் தனியார் முதலீட்டினை ஊக்குவித்து பொது முதலீட்டின் செயல்திறனை அதிகரிக்கின்றது. மேலும், ADB ஆனது ஒரு $100 மில்லியன் கடனுதவி மற்றும் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிதி அணுகலை மேம்படுத்துவது தொடர்பில் இரண்டு தொழில்நுட்ப உதவி மானியம் உட்பட மூன்று தொடரும் திட்டங்களைக் கொண்டிருக்கின்றது. ஒரு கடன் உத்தரவாத நிறுவனம் இந்தப் பணியின் இயற்கையானதொரு நீடிப்பாகும். |
| தாக்கம் | இலங்கையின் பொருளாதாரத்திற்கு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட்டிருத்தல் |
| விளைவு | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிதிக்கான அணுகல் மேம்படுத்தப்பட்டிருத்தல் |
| வருவிளைவுகள் | சிறிய மற்றும் நடுத்தர நிறுவன கடன் உத்தரவாத நிறுவனத்திற்கு பெருநிறுவன மற்றும் ஒழுங்குவிதிக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.<br><br>நிதி ரீதியாக நிலைத்திருக்கக் கூடிய சிறிய மற்றும் நடுத்தர நிறுவன கடன் உத்தரவாத நிறுவனம் செயல்படுத்தப்படல்<br><br>சிறிய மற்றும் நடுத்தர நிறுவன கடன் உத்தரவாத வெளியீட்டல் மேமப்டுத்தப்பட்டிருத்தல் |
| பூகோளம்சார் அமைவிடம் | |

**பாதுகாப்பு வகைகள்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | FI |
| சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம் | FI-C |
| சுதேச மக்கள் | FI-C |

**சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| |
|---|
| சுற்றுச்சூழல் சார்ந்த பார்வைகள் |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் |
| சுதேச மக்கள் |

**பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

| | |
|---|---|
| திட்ட வடிவமைப்பின் போது | |
| திட்ட அமுலாக்கத்தின் போது | |

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | tbd |
| கொள்வனவு | tbd |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | ஹொஷினோ, டகுயா |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி திணைக்களம் | தெற்கு ஆசிய திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | பொது முகாமைத்துவம், நிதித் துறை மற்றும் வணிகப் பிரிவு, தெற்கு ஆசிய திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **நிதி அமைச்சு**<br>திறைசேரிக் கட்டம்<br>கொழும்பு -01<br>இலங்கை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | 15 பெப்பிரவரி 2017 |
| உண்மை அறிதல் | 20 மார்ச்சு 2017 இலிருந்து 24 மார்ச்சு 2017 வரை |
| MRM | 31 மார்ச்சு 2017 |
| ஒப்புதல் | - |
| இறுதி மீளாய்வுப் பணி | - |
| இறுதி PDS புதுப்பிப்பு | 15 பெப்பிரவரி 2017 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: ஏனெனில், PDS ஆனது ஒரு செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அவை கிடைக்கும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ADB இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு ‘‘உள்ளபடியாக’’ வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.